1984 மார்ச் 20]

குடிநீர் திட்டம் செயல்படும்வரை பயன்படுத்தப்பட்டது. 1978-ம் ஆண்டு முதல் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் மூலம் மக்களுக்கு குடிநீர் தேவையான அளவு விநியோகிக்கப் பட்டு வருவதால், இந்நகராட்சிக்கு தற்போது இந்த நீர்த் தொட்டிகளைப் பயன்படுத்தும் அவசியம் இல்லை. இத் தொட்டிகளை தேவைப்படும் வேறு நகராட்சிகள், அல்லது ஊராட்சி ஒன்றியங்களுக்கு விற்றுவிடுவது பற்றி நகராட்சி ஆணையர் தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

ஜோலார்பேட்டை ரயில் நிலையத்தில் மேம்பாலம் கட்டும் திட்டம்:

வினா எண். 569—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :—

(அ) வடஆற்காடு மாவட்டம் ஜோலார்பேட்டை ரயில்வே (ஜங்ஷன்) ஸ்டேஷன் மேலே மத்திய அரசு உதவியுடன் மேம் பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடமுள்ளதா ?

(ஆ) ஆமெனில் விரைவில் கட்டி முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. ப. சுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஜோலார்பேட்டை ஒரு பெரிய ஜங்ஷன். அது ஜோலார்பேட்டை யின் மத்தியில் இருக்கிறது. ஆகவே, ஒரு பக்கத்தில் இருக்கும் மக்கள் மறு பக்கம் போகவேண்டும் என்றால் மிகவும் சிரமப் படுகிறார்கள். ஆகவே, அந்த இடத்தில் ஒரு மேம்பாலம் கட்டுவதற்கு மத்திய அரசிடம் அனுமதி பெறுவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அது பற்றிய திட்டம் இப்போது இல்லை என்பதைத்தான் முதலி லேயே தெரிவித்தேன்.

திரு. ப. சுந்தரம் : தலைவர் அவர்களே, அங்கே ஒரு மேம்பாலம் இல்லாத காரணத்தால் ஒரு பக்கத்தில் இருந்து மறு பக்கத்திற்கு போக்குவரத்து செல்வதில்பல் வேறு இடையூறுகள் இருக்கின்றன. அங்கே இருக்கின்ற கேட் அடிக்கடி மூடப்படு வதால், ஏறக்குறைய 6 கிலோ மீட்டர் தூரம் சுற்றி வரவேண்டி யிருக்கிறது. அதோடு மருத்துவ மனைக்கு வருகின்ற நோயாளி

கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். கர்ப்பிணிகள் கூட, அந்த கேட் மூடியிருக்கின்ற நேரத்தில், உடனடியாக மருத்துவ மனைக்கு வரமுடியாத காரணத்தால், இறந்துபோகும் நிலைமைகள் கூட இருந்து இருக்கின்றன. ஆகவே, அரசு இதையெல்லாம் மனதில் கொண்டு உடனடியாக மத்திய அரசோடு தொடர்பு கொண்டு அங்கே மேம்பாலம் கட்டித் தர நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ரயில் பாதையின் குறுக்கே மேம்பாலம் கட்டவேண்டும் என்று சொன்னால் மத்திய அரசின் ஒப்புதல் தேவை. அது கிடைத்தால் தான் செய்ய முடியும். இப்படிப்பட்ட ரயில்பாதைகள் மீது மேம்பாலம் கட்டுகிற நேரத்தில் 50 சதவீதம் செலவை ரயில்வே துறையும், 50 சதவீதம் செலவை அங்கேயிருக்கிற நகராட்சியோ அல்லது ஒன்றியமோ ஏற்றுக்கொள்ள வேண்டும். மத்திய அரசைப் பொறுத்தவரையில் இதுபோன்று ரயில் பாதை குறுக்கே மேம்பாலம் கட்டுவதற்கு அதிக அளவில் நிதி ஒதுக்குவது இல்லை. இந்த அரசைப் பொறுத்தவரையில் நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

நகரரட்சிகளில் பன்றிகள் வளர்க்கத் தடை.

*வினா எண். 570—திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) நகராட்சிகளில் பன்றி வளர்க்க தடை செய்யப்பட் டுள்ளதா ?

(ஆ) பன்றிகளால் மூளைக்காய்ச்சல் ஏற்படுவதாக அரசுக்கு புகார் ஏதும் வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) நகராட்சிகளில் பன்றிகள் வளர்க்க தடை செய்யப்படவில்லை. ஆனால் 1920ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தில் பன்றிகள் உள்பட எல்லா பிராணிகளுக்கும் வரிவிதிக்கவும், உரிமம் பெறாமல் வைத்திருக்கும் பன்றிகளை அழிப்பதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது.

(ஆ) இல்லை.

(முற்பகல் 9-30).

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரிலுள்ள தாய்மார்கள் காலை தலே வீட்டிற்கு முன்னால்சாணம் தெளித்து அழகாகக் கோலம்